**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.175/2024**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | சகுந்தலா(PW1) | | |
| Husband's Name | மோகன் | | |
| Village | புலுவப்பட்டி | | |
| Taluk | திருப்பூர் | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் பனியன் கம்பெனியில் செக்கிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் காலமான மோகன் என் கணவர். 2023 ம் வருடம் 5 வது மாதத்தில் ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது என் கணவருக்கு விபத்து நெருப்பெரிச்சல் ரோட்டில் நடந்ததாக பூபதி தகவல் சொன்னார். என் கணவர் மீது இரண்டு சக்கர வாகனம் மோதியது என்று எனக்கு தகவல் சொன்னார். நான் விபத்து நடந்த இடத்திற்கு வந்து பார்த்தபோது என் கணவரை ஆம்புலன்ஸில் ஏற்றி வைத்திருந்தார்கள். என் கணவர் மயங்கிய நிலையில் இருந்தார். என் கணவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தேன். தீவிர சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக மதியம் 2 மணிக்கு தகவல் சொன்னார்கள். காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாருக்கு பின்னிட்டு போலீசார் திருப்பூர் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

எனக்கு சொந்த ஊர் கேரளா. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான் பேச மட்டும் தான் தெரியும். காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நான் எழுதவில்லை. அந்த புகார்

போலீசார் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரில் நான் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன். அதில் உள்ள விபரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். நான் காவல் நிலையத்திற்கு செல்லும் போது பூபதி என்னுடன் வரவில்லை. . விபத்து நடந்த இடத்திற்கு என் கணவர் மோகன் எதற்காக சென்றார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது என் கணவருக்கு வயது 55. விபத்து நடந்த பதட்டத்தில் நான் வயதை அதிகமாக கூறி விட்டேன். விபத்து நடக்கும்போது என் கணவருக்கு வயது 64 ஆனால் நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. என் கணவர் இறந்ததற்கு நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதில் நான் பணம் பெற்றுக் கொண்டேன். என் கணவருக்கு வயது முதிர்வின் காரணமாக ரோட்டை திடீரென கடந்து சென்றதால் அவரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றும் இரு சக்கர வாகனம் ஓட்டி வந்தவர் மீது எவ்வித தவறும் இல்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகளில் உள்ள அனைவரும் என்னுடன் காவல் நிலையம் வந்தனர்.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |